தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 20-4-57 | சனிக்கிழமை | இதழ் 31

★ கவிஞனும் காதலும் ★

கண்ணதாசன்

காதல், மனித இதயத்தின் தடுக்கமுடியாத இசையாகும். காதல், பிரதியொரு உயிரினத்துக்கும் இன்றியமையாததேவையாகும். பருவம் கடந்தாலும் கடவாமல் நின்று, உருவம் மாறினாலும் மாறாமல் நின்று, உள்ளத்து உணர்ச்சிகளுக்கெல்லாம் தலைமை வகிப்பது காதலாகும். மனிதனுடைய உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை உணர்ச்சிகளை ஓடவிட்டு சூழ்நிலைகளை மறக்கவைப்பது காதலாகும். காதல் வயப்பட்ட சிந்தனை உலகில் வேறு சில நிகழ்ச்சிகளும் உணர்ச்சிகளும் இருப்பதையே அறிய மறுக்கிறது. முழு இதயமும் அதற்கே உரிமையாகிவிடுகிறது.

முற்றிய பாச உணர்ச்சியிலும், தாளமுடியாத சோக உணர்ச்சியிலும் கண்களிலே கண்ணீர் பெருக்கெடுப்பதைக் காண்கிறீர்கள். அதிகம் அழுதாலும் கண்ணீர் வருகிறது. அதிகம் சிரித்தாலும் கண்ணீர் வருகிறது. வேறு வேறான இரண்டு உணர்ச்சிகளை ஒரே அங்கம் ஒரே மாதிரி பிரதிபலிக்கிறது. காரணம் என்ன? காதல், பாசம், சோகம் இவைதான் மனிதனது முழு உடம்பையும் ஆட்டிப்படைக்கும் சக்திகள். இவை இல்லாமல் மனித வாழ்வு இயங்காது. இலக்கியத்தில் நாம் படிக்கின்ற வீரமும், நாம் எடுத்துச்சொல்கின்ற வீரமும் திடீரென்று வந்து திடீரென்று மறைவதாகும். ஆத்திர உணர்ச்சியால் தூண்டப்படும்போது மட்டும்தான் அந்த வீரம் உருவாகிறது. திடீரென்று ஆத்திரம் வந்து ஒருவனைக் கொலை செய்துவிடுகிறான் இன்னொருவன் என்றால் அப்போது அவனுக்கு வந்த வீர உணர்ச்சி அவன்கூடவே குற்றக்கூண்டுக்கும் வருவதில்லை. குற்றக்கூண்டில் அவன் கோழையாகிறான். தண்டனை பெரும்பொழுது தாளமுடியாமல் அழுதுவிடுகிறான். ஒருநேர வீரன், மறுநேரம் முழுக்கோழை. அதிலேயும் யாராவது தைரியமாக இருந்தார்கள் என்றால், அவர்கள் இனி வேறு வழியில்லை என்ற விரக்தி எண்ணத்தால் உந்தப்பட்டவர்களே தவிர, வீர உணர்வு கொண்டவர்கள் அல்ல. ஆனால் காதலும், பாசமும், சோகமும் மனிதனைப் பாடைவரை தொடர்ந்து வருகின்றன.

நாம் இலக்கியங்களில் பார்க்கிறோம். நல்ல வீரன் நல்ல காதலனாக இல்லை. நல்ல காதலன் நல்ல வீரனாக இல்லை. பாரதத்திலும், பாகவதத்திலும் வரும் கண்ணன் இரண்டிலுமே நல்ல காதலனாகப் படுகிறான். ஆனால் நல்ல வீரனாக இல்லை. அவனுக்குச் சொல்லப்படும் வீரம், மந்திர தந்திர மாய வித்தைகளைத் துணையாகக் கொண்டது. வில்லெடுத்து வேலெடுத்து அவன் பாயவில்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே 'டிரிக் ஷாட்' வீரம் நடத்துகிறான். இது கவிஞன் அவனுக்கு ஒட்டவைத்த துணைச் சக்தியாகத் தனியாக நிற்கிறதே தவிர உடம்போடு கலந்த ஒன்றாக இல்லை. நல்ல வீரத்தோடு அவன் நடத்திய நிகழ்ச்சிகள் எதையும் நாம் காண முடியவில்லை. அதேபோல் அர்ச்சுனனும் மிகச் சிறந்த காதலனாகக் காணப்படுகிறான். அதே நேரத்தில் அவனுக்கு ஒட்டப்பட்ட வீரமாவது உறுதியாக நிற்கிறதா என்றால் இல்லை. அர்ச்சுனனுடைய வீரத்தின் குட்டு பாரதப் போரில் வெளியாகிறது. அவன் இரதத்தில் சோர்ந்து விழுகிறான். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குகிறது. கண்ணன் துணை நின்று, உபதேசம் செய்து, ஊசி போட்டுக் கிளப்ப வேண்டியிருக்கிறது. நல்ல வீரனுக்கு இது அடையாளமாகாது. நல்ல வீரன் போர்க்களத்தில் புலம்ப மாட்டான்.

ஆனால் அவன் சகோதரனாகக் கூறப்படும் பீமன் மிகப் பெரிய வீரனாகிறான். கதையும் கையுமாக நின்று 'யார் வருகிறீர்கள்! வாருங்கள்!' என்று 'சவால்' விடுகிறான். துரியன் அவையில் துரௌபதி, துச்சாதனன் துயில் உரிந்தபோது, தருமனின் பொறுமையையும் மீறித் துடித்தெழுகிறான் பீமன். துரௌபதியின்மீது கொண்ட காதலால் அல்ல — மான உணர்ச்சியால் என்கிறான் கவிஞன். அப்போதும் பீமனுக்குக் காதல் இல்லை. அதற்கு முன்னாலும் இல்லை பின்னாலும் இல்லை. இது நம்மைக் காட்டிலும் துரௌபதிக்கு நன்றாகத் தெரிகிறது. அர்ச்சுனனின் காதற் குழைவு, பீமனின் வீரத்தில் ஒட்டவில்லை.

அதே போலத்தான் இராமாயணத்து இராமனும். காதலிலே அவனை அதிகம் குழையவைத்த காரணத்தாலே, அவனை நல்ல வீரனாகச் சிருஷ்டிக்கக் கவிஞனாலே முடியவில்லை. ஒரே அம்பு உலகத்தை வெல்லும் மாயவேலைதான் அவனது வீரத்திலும் செயல்படுகிறது. இப்படிச் சிறந்த காதலால் இழுக்கப்பட்ட மனது அந்தக் காதலனை முழு வீரனாக வாழ விடுவதில்லை என்பதைப் பார்க்கிறோம்.

காதலைப் பற்றிப்பாடி, காதலிலேயே குலவி, காதலிலேயே தலைகுப்புற விழுந்துகிடந்த கவிஞர்களெல்லாம் உலகத்தில் வேறு எதற்கும் பயன் படாமல் போனார்கள் என்றால், இதுதான் காரணம். இன்பம் தரக்கூடிய காதலும், மதுவும் தவிர வேறு எதுவும் அவர்களுக்குத் தெரியாது. உலக சுகங்களை அவர்கள் ஆவேசத்தோடு ரசித்தார்கள். அல்லும் பகலும் இளம் பெண்ணை விட்டுப் பிரியாமலிருக்க ஆசைப்பட்டார்கள். அவர்கள் காதலித்தார்கள். காதலைத் தூண்டினார்கள். ஆனால் வீரர்களாக வாழாமலேயே வீரத்தைத் தூண்டினார்கள். புல்லும் வாளாகும் அளவுக்குச் சொல்லை வடித்தார்கள். 'துள்ளி எழு தோழனே துடித்தெழு! மானம் காக்கப் போராடு' என்று மற்றவர்களைத் தள்ளிவிட்டார்கள். 'பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி ஒரு மகன் அல்லதில்லாள் செருமுகம் நோக்கிச் செல்கென விடு'த்த கதையைக் கூறினார்கள். களிறெறிந்து பட்ட மகனைக் காணப் போன தாயைக் காட்டி, அவள் அப்போதும் சிரித்தாள் என்று அழகாகக் கூறினார்கள். நமது இரத்த நாளங்களைத் துடிக்க வைத்தார்கள். மயிர்க்கால்களில் உணர்ச்சியூட்டினார்கள். இருதயத்தைச் சூடாக்கினார்கள். எங்கே வாள்? என்று தேட வைத்தார்கள். இவ்வளவுக்கும் நம்மைத் தயார் செய்த கவிஞர்கள், காதலிலும், மதுவிலும்தான் மூழ்கிக் கிடந்தார்கள். வாளெடுத்து அவர்கள் கையில் கொடுத்தால், 'மதுக் கிண்ணம் இல்லையா' என்றார்கள். 'வாருங்கள் போருக்கு' என்று அழைத்தால் 'காதல்போரா, கடும்போரா' என்று கேட்டார்கள். வீர உணர்ச்சியைத் தூண்டி விட்ட கவிஞர்கள், எல்லோரும் போருக்குப் போனதும் தாங்கள் மட்டும்

— 3ம் பக்கம் —

குழம்பித் தவிக்கும் 'குல்லா'க்களின் கூட்டுச் சதி

“என் பெயர் செங்கல்வராயன். கல்வித்துறையில் எத்தனையோ பட்டங்களைப் பெற்றேன். எவ்வளவோ திறமை என்னிடமிருக்கிறது. என்ன செய்வது! பொதுத் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லையே! போன முறையும் இப்படித்தான்! நிச்சயமாக வெற்றி பெற்றுவிடலாமென்றுதான் நினைத்தேன். அதற்காக எப்படி எப்படியெல்லாமோ சொற்பொழிவாற்றினேன். நான் அண்ணாத்துரையோடு படித்தவன் என்று பேசிப் பார்த்தேன். அவருடன் பன்முறை ஒரே மேடையில் வாதித்திருக்கிறேன் என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஒன்றும் செல்லவில்லை. இந்த முறைகூட நான் பல வழிகளைக் கையாண்டேன். எனக்குத்தான் முறைப்படி பேசத் தெரியும்; சர்ச்சில் பாணியை நான் பின்பற்றக் கூடியவன்; சட்ட மன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தால் வெகு சாதுர்யமாகப் பேசுவேன் என்றுகூட பொய் சொல்லிப் பார்த்தேன். அதுவும் பலிதமாகவில்லை. இந்தத் தோல்விகளையெல்லாம் நினைக்கும்போது என்னுடைய நடைமுறை நடவடிக்கைகளில் ஏதோ ஒரு பெருங்குறை இருந்து வருவதாகவே எனக்குப் படுகிறது. இல்லாவிட்டால் மற்ற காங்கிரஸ்காரர்கள், சாதாரணக் காங்கிரஸ்காரர்கள் எளிதில் வெற்றி பெற்றுவிடும்போது, படித்த நான், சிறந்த பேச்சாளியாகிய நான் ஏன் தோற்றுக்கொண்டே இருக்கவேண்டும்? மேயர் பதவிகூட எனக்கு முதல் போட்டியிலேயே கிடைத்துவிடவில்லையே! இப்படித் தானே பலமுறை ‘பல்டி’ அடிக்கவேண்டியிருந்தது! அதுதான் சொல்லுகிறேனே, என்னிடம் ஏதோ ஒரு பெருங்குறை இருக்கிறது! இனி அதைத் திருத்திக்கொண்டுதான் அரசியலில் முழுதும் பங்கேற்க நினைக்கிறேன். என்னுடைய போக்கையும், எனது தேர்தல் முடிவையும் முன்கூட்டியே தெரிந்து தானோ என்னவோ காமராஜ் விநாயகத்தை இழுத்துப் போட்டுக்கொண்டார். காங்கிரசுக்குக் கிடைத்த ஒரு புதிய பேச்சாளரல்லவா விநாயகம்!

எது எப்படிப் போனாலும் எனக்கு சினிமா உலகம் ஒன்று இருக்கிறது. முன்பே ஒருமுறை ‘நேத்தாஜி’ என்ற படத்தில் நானே பிரதம பாகத்தில் நடிப்பதாக இருந்தது இடையிலே கைவிடப்பட்டது. இனி அந்த வேலையைத் துரிதப்படுத்தினால்தான் மறுபடியும் நான் மக்கள் மத்தியில் கம்பீரத்துடன் நடைபோட முடியும். இல்லாவிட்டால் மக்கள் என்னை மறந்தே விடுவார்கள். அரசியலில் மறந்து போனவர்களை மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவருவது என்பது சாமான்யமல்லவே! அடேயப்பா! வாழ்ந்து கெட்டவர்களும், செல்வாக்கு அற்றுப்போனவர்களும் ஒன்றுதானே! இருக்கட்டும்! ‘யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம்’ வராமலா போய்விடும்!

★

வெங்கடசாமி நாயுடு நான். ஒருமுறை மடாலய மந்திரியாகக்கூட இருந்திருக்கிறேன். சும்மா தானே இருக்கிறோம் என்று காங்கிரசுக்கு மனுப் போட்டேன். ஆயிரம்விளக்குத் தொகுதி கிடைத்தது. அதுவும் சரி என்றேன். சிவசண்முகம் பிள்ளைதான் அந்தத் தொகுதியில் ஜெயித்திருக்கிறாரே என்ற தைரியமும், முனிசிபல் கவுன்சில் தேர்தலில் நெடுநாட்களாக ஆயிரம்விளக்குத் தொகுதியில் வெற்றி பெற்றுக்கொண்டு வந்த எதிர்க்கட்சி, இந்த முறைதான் காங்கிரசிடம் தோற்றுப் போய் விட்டதே என்ற துணிச்சலும் தான் எனக்குத் தெம்பு ஊட்டின. தி. மு. க., தி. மு. க. என்று வாலிபர்கள் பேசிக்கொள்வார்கள். சின்னவர்கள் தானே என்று எண்ணினேன். அவர்களிடம்தான், அந்தச் சின்னவர்களிடம் தான் நான் ‘கோட்டை’யை விட்டுவிட்டேன். இருந்தாலும் காமராசர் இப்படிச் செய்யக்கூடாது. தனக்கு யார் யார் வேண்டுமோ அவர்களையெல்லாம் நல்ல நல்ல தொகுதிகளில் போட்டுவிட்டு அவர்கள் வெற்றிபெறச் செய்வதற்குக் ‘கஜகர்ணம்’ போட்

அம்பலமாகுமா ?

டார். என்னைப்போல் சிலருக்கு, தன்னை நீதிமான் என்று மற்றவர்கள் நினைப்பதற்காக காங்கிரசின்பேரில் தேர்தலில் நிற்க அனுமதித்தார். யார் நின்று தோற்றாலும் தோற்பது காங்கிரஸ் தானே என்பதை நினைத்துப் பார்க்கவில்லை. நான் ஜெயித்தால், நான் மந்திரி பதவி கேட்பேன் என்று தவறாகக் கருதிக்கொண்டுவிட்டார். அதனால் தான் அவருடைய எடுபிடிகள் எனக்கு வேலை பார்க்கவில்லை. தனக்கு மெஜாரிடி வந்தால் போதும் என்ற நினைப்பில் குறிப்பிட்ட ஒரு சிலரைப் பற்றிக் கவலை எடுத்துக்கொள்ளவே இல்லை. மந்திரி சபை அமைப்பதற்கான பலத்தை அவர் பெற்றுவிட்ட பிறகு அவர்மீது எப்படிப்பட்ட குற்றத்தைச் சுமத்தியும் என்ன பயன்? மேலிடம் கவனித்தால் தானே! காமராசரின் புகழைப் பாடுவதற்கென்றே டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேருவின் தோளில் உட்கார்ந்திருக்கிறார். அதற்குமேல் என்ன வேண்டும்? எம்பெருமான் ராஜாஜி இருந்திருந்தால் இப்படியா இருக்கும்! என்னமோ இப்பொழுது அவர்கள் காலம்! காலம் என்ன அப்படியேவா இருக்கப்போகிறது! அதையும் தான் பார்த்துவிடுவோமே! பழி வாங்குவது என்பது பசிக்குப் பனம்பழத்தைச் சாப்பிடுவதுபோலத்தான் என்பது இவர்களுக்குத் தெரியுமா? எங்கள் ராஜாஜிக்குத் தெரியும்! அவர் தீர்க்கதரிசி! அறிவாளி! சரி தொலைகிறது நமக்கேன் இந்தத் தொல்லைகளெல்லாம்! அந்த விருதுநகர் ஆசாமிக்குத் தெரிந்தாலே ஆபத்தாயிற்றே!

★

“உங்களுக்குத் தெரியாதா? நான்தான் ஆர். வி. சுவாமிநாதன். சொந்த ஊர் பாகனேரி- இராமனாதபுரம் ஜில்லா—முக்குலத்தோர் வகுப்பு. தேர்தலிலே நான் தோற்றுப்போனேன் என்பதை என்னாலேகூட நம்பிட முடியவில்லை. எப்போதும் நான் கடைசி நேரத்திலேதான் வேலை பார்ப்பதுண்டு. இந்த முறையும் அப்படித்தான் வேலை பார்த்தேன். காரைக்குடி, திருக்கோட்டியூர் போன்ற தொகுதிகளில் சுற்றித் திரிந்துவிட்டு பத்து நாட்களுக்கு முன்புதான் என்னுடைய சொந்தத் தொகுதியாகிய சிவகங்கைத் தொகுதிக்குள் நுழைந்தேன். பார்க்கவேண்டியவர்களையெல்லாம் பார்த்தேன். பரவசத்தோடு வரவேற்றார்கள். பயம் தெளிந்து நம்பிக்கை பிறந்தது. இந்தக் கருப்புச்சட்டைக்காரர்களைப் பார்க்கலாம் ஒருகை என்றுதான் நெஞ்சைத் தூக்கி உலவினேன். பாவி, இந்த சிவகங்கைக் குமாரராஜா நிற்பாரென்று யாருக்குத் தெரியும்! அடேயப்பா! 22000 ஓட்டுகள் வித்தியாசத்திலல்லவா அந்த ஆள் ஜெயித்துவிட்டார். அவமானம்தான்! அழிக்கமுடியாத கெட்ட பெயர்தான். என்ன செய்வது! ஒரு வருஷமா? இரண்டு வருஷமா? பத்து வருஷங்களாக ஒரு தொகுதியை ஏமாற்றிக்கொண்டு வருவதென்றால், அது என்னைப் பிடித்த கெட்டகாலம் தானே!

ஆனால், நான் தோற்றது எனக்கு எவ்வளவு கவலையாக இருக்கிறதோ, அவமானமாகப் படுகிறதோ, அதைப்போல் இரண்டு மடங்கு அளவுக்கு தலைவர் காமராஜுக்கு சந்தோஷமாகப் படுகிறது. என்ன திகைக்கிறீர்கள்! உண்மைதான். போன முறையே நான் பந்தயம் கட்டினேன். விவசாய மந்திரி நான்தான் என்று ஊரெங்கும் பிரச்சாரம் செய்தேன். துர்பாக்ய வசத்தால் ஆச்சாரியார் புகுந்தார். என் ஆசை நசித்துப் போய்விட்டது. இந்தத் தேர்தலில் நான் ஜெயித்திருந்தால் நான்தான் விவசாய மந்திரி. தலைவர் காமராஜ் இந்த முறை என்னை ஏமாற்றியிருக்கமுடியாது. போனதடவையே எங்கள் ‘கூட்டத்தை’ச் சேர்ந்த ஐந்து பேரில் யாருக்காவது ஒருவருக்கு ஒரு மந்திரி பதவி தரவேண்டுமென்று எங்களுக்குள்ளேயே ஒரு ரகசிய ஒப்பந்தமிருந்தது. அதுதான் நிறைவேறாமல் போய்விட்டது. அதனால்தான் நான்கூட தலைவர் காமராஜரோடு பல நாட்கள் பேசாமலே இருந்தேன். இப்போது ஜெயித்திருந்தால் எனக்குப் பதவி கொடுத்துத்தானே ஆகவேண்டும். அதனால்தான் ‘தொலைந்தானா சாமிநாதன்! தொலைவிட்டது!’’ என்று தலைவர் பூரித்துக்கொண்டிருக்கிறாராம்! நான்கூட வேறு தொகுதியில் நிற்கலாம் என்றுகூட யோசித்தேன். காமராஜர்தான், ‘நிற்பதால் இருந்தால் சிவகங்கைத் தொகுதியிலேயே நில்லு. அப்படியில்லையென்றால் அந்தத் தொகுதியை வேறொரு புதிய நபருக்குக் கொடுக்கலாம் என்றார். வேறொரு புதிய நபருக்கு விட்டுக்கொடுத்தால், எதிர்காலத்தில் அந்தத் தொகுதியை கைநழுவ விட்டுவிட வேண்டி வருமே என்றுதான் நானே நிற்பதாகக் காமராஜரிடம் ஒப்புக் கொண்டேன். தலைவர் என்ன திட்டத்தில் என்னையே சிவகங்கைத் தொகுதியில் நிற்கவைத்தார் என்பது எனக்கு இப்போதுதான் தெரிகிறது. நண்பர்கள் இப்பொழுதுதல்லவா விளக்கினார்கள்! சிவகங்கைத் தொகுதியில் என்மீது வெறுப்பு இருப்பதை அறிந்த தலைவர் என்னையே அந்தத் தொகுதியில் போட்டு மக்களால் துரத்தியடிக்கச் செய்யத் திட்டமிட்டாராம்! அரசியலுக்கே இந்த சாமிநாதன் வேண்டாமென்கிறாராம்! தொழில்தான் வேண்டுமென்றால் தொழிலைக் கவனிக்கட்டும், இல்லை, அரசியல்தான் வேண்டுமானால் அரசியலிலேயே இருக்கட்டும். இரண்டையும் வைத்துக்கொண்டு குழப்பக்கூடாது என்றாராம். அதனால்தான் நான் தொடங்கியிருக்கும் பாண்டியன் மோட்டார் கம்பெனித் திறப்பு விழாவின்போதுகூட இவ்வாறு இடித்துக் காட்டியதுபோல பேசினாராம்! இதை அண்ணாத்துரைகூட திராவிடநாடு பத்திரிகையில் அப்பொழுதே எழுதியிருந்தார். தலைவர்கள்தான் தலைவர்களை அறியமுடிகிறது. என்ன செய்வது! நான் தோற்றேன். அது காமராஜருக்குக் கொண்டாட்டமாக இருகிறது. கனவு கண்டதைப்போல் சிலர் மந்திரிகளாகிவிட்டார்கள். என்னுடைய காரைப் பார்த்தவுடனேயே இவர்களெல்லாம் ஓடிவந்து வரவேற்றவர்களாயிற்றே! இப்போது? அவர்களுக்கென ஒரு பாதை! ஒரு காரியதரிசி! இன்னும் ஐந்தாண்டுகள்! ஓட்டமாய் ஓடிவிடாதா? பிறகு பார்ப்போம்! இனி நானுண்டு எனது கார் வியாபாரமுண்டு! பெரிய மனிதர்கள் உறவு உண்டு! வேறென்ன உண்டு. ★

கவிஞனும் காதலும்...

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

காதலில் ஆழ்ந்தார்கள். அவர்களும் போருக்குப் போகவில்லையே என்று நாம் ஆயாசப்படத் தேவை இல்லை. அதில் அவர்களுக்கு விதிவிலக்குத் தேவை. அவர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்கள் மாதிரி. பல பேரைத் தயார் செய்வார்கள். தாங்கள் மட்டும் பழய இடத்திலேயே இருப்பார்கள். மூளையை ஒரு வழிப்பட்ட சிந்தனைக்கு ஆளாக்கி ஆளாக்கிக் களைத்துப்போன நேரத்தில், அந்தக் களைப்பைத் தீர்க்க அவர்களுக்குக் காதலும் போதையும் தேவைப்பட்டது. அதனால்தான் அவர்கள் கூடியிருந்து குடித்ததும், ஆடிப்பாடி அனுபவித்ததும். எந்தக் கவிஞனையும் இதில் ஏதாவதொன்று விட்டபாடில்லை. அப்படி இந்த இரண்டையும் வெறுத்து எவனாவது ஒரு கவிஞன் வாழ்ந்திருந்தால், அவன் நல்ல கவிதைகளைப் பாடியதில்லை. நல்ல கவிதைகளைப் பாடிய எல்லோரும் குடித்திருக்கிறார்கள் - அனுபவத்திருக்கிறார்கள். இதை நான் சொல்வதால் குடித்துக் கூத்தாடுகிறவர்கள் நல்ல கவிஞர்களாக வரமுடியும் என்பது பொருளல்ல. சிறந்த கவிஞர்கள் அப்படி வாழ்ந்திருக்கிறார்கள்; அவ்வளவுதான்.

பல்லாயிரம் வருடத்து இலக்கியப் பரம்பரைக்கு ஒரு தலை கீழ்த்திருப்பதைக் காட்டியவன் பாரதி. அவன் கஞ்சாக் குடித்தான்.

குத்திக் குடைந்து, கிண்டலும் கேலியும் பேசி, இருபொருள், மூன்றுபொருள்களை ஒரே வார்த்தையில் விளக்கித் தமிழிலே 'சதாவதனம்' நடத்தியவன் காளமேகம். அவன் தாசிகள் வீடே கதி எனக் கிடந்தான்.

ஆங்கிலப் புலவர்களில் மிகப் பெரியவன் என்று கருதப்படும் மகாகவி பைரன், தினசரி புதுப்புது 'ரகங்களை' அனுபவவித்தான். ஒரு மனைவி தத்துவத்தில் உணர்ச்சியே இருக்க முடியாது என்று நம்பினான். கன்னிப் பெண்களோடு சுற்றினான். கல்யாணம் நடத்தியும் கைவிட்டான். 'நமக்குக் குழந்தை பிறந்திருக்கிறது பார்த்தீர்களா?' என்று குழந்தையை எடுத்துக் காட்டிய மனைவியைப் பார்த்து 'ஆடு மாடுகளுக்குக் கூடத்தான் குழந்தை பிறக்கிறது' என்று அலுப்போடு சொன்னான். கடைசி நேரத்தில், உரிமையோடு உட்கார்ந்து அழுவதற்கு ஒருத்தி இல்லாமலேயே மறைந்தான்.

தமிழுக்குத் தலையாய கவி என்று கூறப்படும் கம்பன் கூட பெண்மோகம் கொண்டு அலைந்திருக்கிறான். கம்பன் மீது பகை கொண்டு அவனை இந்த வகையில் சேர்க்கவில்லை. 'தனிப்பாடல் திரட்டு' மேலக்துச் சொல்கிறது அவனது சரசங்கள் பற்றிய கதையை.

பாரசீகக் கவிஞன் உமர்கய்யாம, கிண்ணங்களின் ஒலிக்கும், கிறுகிறுக்க வைக்கும் மொழிக்கும் இடையே தன் காவிய உலகத்தை நிர்மாணித்துக் கொண்டு அங்கேயே இருந்து, வாழ்ந்து, அனுபவித்து மடிந்தான்.

குறள் வடித்த வள்ளுவனைப் பற்றி மட்டும்தான் இப்படிப்பட்ட செய்திகள் இல்லை. அவனைப் பற்றிய வரலாறே சரியாக இல்லை. இருந்திருந்தால் அதில் எத்தனை எத்தனையோ?

ஆகவே, சிறந்த காவியங்களை ஆக்கிப் படைத்தவர்கள் எல்லோரும், தங்களை நியாமான வாழ்க்கை முறைக்கு விதிவிலக்கு ஆக்கும்படி சமுதாயத்துக்கு மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள். 'நாங்கள் தப்புத் தண்டாதான் செய்கிறோம். தயவு செய்து எங்களுக்கு அனுமதி கொடுங்கள்' என்று கேட்காமல் கேட்டிருக்கிறார்கள். யுக யுகாந்திரங்களுக்குச் சாகாமல் நிற்கக் கூடிய நல்ல காவியங்களை அவர்கள் தந்திருப்பதாலேயே சமுதாயமும் அவர்களுக்கு இந்த விதிவிலக்கைத் தந்திருக்கிறது. அதனால்தான் 'கவிஞர்கள் சொல்வதுபோல் செய்யுங்கள், செய்வதுபோல் செய்யாதீர்கள்' என்ற பழமொழியும் பிறந்திருக்கிறது. "உலகத்து நீதியைச் சொன்ன நீ, சொந்த வாழ்வில் இப்படி நடக்கலாமா?" என்று கவிஞனைப் பார்த்து நாம் கேட்க முடியாது. காரணம், அவன் கவிஞன். கடவுளுக்குச் சமமானவன். உற்பத்தியின் இரகசியங்களை அறிந்தவன்.

ஒவ்வொரு காவியத்தையும் அவன் வடிக்கும்போதும் அந்தக் காவியத்தின் ஒவ்வொரு பாத்திரமாகவும் அவன் மாற வேண்டியதிருக்கிறது. பாரதி 'பாஞ்சாலி சபதம்' எழுதினான் என்றால், அவன் பாஞ்சாலியாக ஒரு நேரமும், பார்த்தனாக மறு நேரமும் மாறுகிறான். துகிலுரியக் கட்டளையிட்ட துரியோதனனாகிறான். துகிலுரிந்த துச்சாதனனாகிறான். உரியப்பட்டபோது ஓலமிடப் பாஞ்சாலியாகிறான். ஓலங்கேட்டு உருகி வடியக் கண்ணனாகிறான். கண்ணன் கைச் சேலையாகிறான். கணத்துக்குக் கணம் வளர்கிறான். கேலிச் சிரிப்புக்குச் சகுனியாகிறான். தலைகுனிந்து நிற்கும் தருமனாகிறான். பின் ஆத்திரம் கொண்ட பாஞ்சாலியாகி, அவிழ்ந்த கூந்தலை முடிக்க மாட்டேன் என்று சபதம் கூறுகிறான். பாரதி நவரச பாவங்களுக்கும், சகல பாத்திரங்களுக்கும் தானே வடிவமாகிறான். இவ்வளவையும் படைத்து முடித்த பிறகு அலுப்பு ஏற்படுகிறது. 'ஓய்வு' எடுத்துக் கொள்கிறான்.

இன்பங்களில் திளைக்காமலேயே சிறந்த காவியம் பாடியவர்கள் இருக்கிறார்களா? இருந்திருக்கிறார்கள். இளங்கோ வடிகள் அப்படிப் பட்டவர். அவர் இன்பங்களில் திளைக்கவில்லை. ஆனால் திளைத்தவர்களைக் காட்டிலும் இனிமையாகக் காதல் அனுபவங்களைக் கூறுகிறார்.

உலகம் இன்றோடு அழிந்துவிடலாம் என்றெண்ணி, அனுபவித்து, அனுபவித்து மகிழ்ந்தார்கள் கண்ணகியும் கோவலனும் என்கிறார். காதல் ரசனை துளித் துளித் தேனாக உருவெடுக்கிறது. கவிஞனின் கை, மெல்ல நகர்கிறது. கோவலனாகிக் கொஞ்ச நேரம் இருந்து கண்ணகியை அழைக்கிறார். கண்ணகியாகிக் கண்களைச் சாய்த்து நாணித் தலைகுனிகிறார். மாசறு பொன்னே வலம்புரி முத்தே என்று வர்ணிக்கிறார், கோவலனாயிருக்கும்போது. அவர் உள்ளத்தைக் காதல் தொடவில்லை என்றால் அந்த உணர்ச்சி இவ்வளவு ஒழுங்காக உருவகமாகாது. ஆனாலும் அவர் துறவி. அவர் துறவியாக இருந்ததால் உடலைத் தொடாத காதல், கவிஞராக இருந்ததால் உள்ளத்தைத் தொட்டது. அந்த இரகசியங்களை அவரது இருதயமும் அறிந்தது. அந்த உலகம் இப்படி இப்படி இருக்கும் என்பதும் அவருக்குப் புரிந்தது. எல்லாம் புரிந்தது, செயல்படவில்லை.

இன்றைய யோகி சுத்தானந்த பாரதியாரும் இந்த வகையைச் சேர்ந்தவர்தான். இனிக்க இனிக்க அவரும் காதலைச் சொல்கிறார். மணமான கவிஞர்களைக் காட்டிலும், அழகாகக் காதல் மொழிகளை வடிக்கிறார். இல்லறத்தில் நாமும் இப்படி நடந்தால் நன்றாயிருக்குமே என்று பிறரை எண்ணவைக்கிறார். 'ஆனவர்'களுக்கு 'ஆகாதவர்' யோசனை சொல்கிறார். எப்படி முடிந்தது? அவர் துறவியாக இருந்தாலும் கவிஞராக இருப்பதாலே காதல் அவரது இதயத்தைக் கரைத்துக் குடிக்கிறது. ஆகவேதான், சொந்த வாழ்வில் எந்த நிலையில் ஒருவன் இருந்தாலும், அவன் கவிஞனாக இருந்தால் காதல் அவன் நெஞ்சைத் தொடாமல் விடாது என்பது உறுதியாகிறது.

சாதாரண மனிதர்களைக் காட்டிலும் கவிஞன் எப்படி உயர்ந்தவனாகிறான்? இது விளக்கப்பட்டால்தானே சமுதாயத்தில் ஒரு விதிவிலக்கையோ, நிதி அளிப்பையோ அவன் எதிர்பார்க்க முடியும்? சாதாரண மனிதர்கள் பெண்களைக் கண்டால், இவளோடு ஆனந்தமாக இருக்கலாமே என்று மொத்தக் கணக்குப் போடுகிறார்கள். காம எண்ணத்தோடு அந்த முழு வடிவத்தையும் பார்க்கிறார்கள். இன்பம் தரக்கூடிய ஒரு இயந்திரம் இது என எண்ணமிடுகிறார்கள். ஆனால் கவிஞர்கள் பெண்ணைக் கண்டால் ஒவ்வொரு அங்கத்துக்கும் உவமை தேடுகிறார்கள். ஒன்றிலிருந்து ஒன்றாகப் பல கிளைகளைப் பிரித்துப் பார்க்கிறார்கள். சாதாரண மனிதர்களுக்குக் கண் கண்ணாகவே தெரிந்தால், கவிஞர்களுக்குக் கண் மீனாகத் தெரிகிறது. உவமையிலேயே அவர்கள் அவளை உருவப்படுத்துகிறார்கள். "பார்த்தேன் ஒரு பெண்ணை. பக்குவமான கன்னி. கூந்தல் மேகம். நெற்றி மூன்றாம் பிறை. புருவம் வில். கண்கள் கயல். நாசி எள்ளுப்பூ. கன்னம் மாங்கனி. உதடு கோவை. பற்கள் முல்லை. நாக்கு இல்லை! (ஆமாம்!" இதுவரை எந்தக் கவிஞனும் உவமை தேடாத ஒரு அங்கம் நாக்குத்தான்!) இப்படிப் பாடுகிறார்கள். "நான் பார்த்தபோது அவள் தலை குனிந்தாள். பாராதபோது, என்னைப் பார்த்து மெல்லச் சிரித்தாள்" என்கிறார்கள். கவிஞன் பார்த்தபோது அவள் தலை குனிந்தாளாம். கண்டான் கவிஞன். நியாயம்! ஆனால் இவன் பாராதபோது அவள் மெல்லப் பார்த்துச் சிரித்தாளாம்! அது எப்படி இவனுக்குத் தெரிந்தது? இவன்தான் பார்க்கவில்லையே! கனவு! கற்பனை! கவிஞன் பார்க்கிக் கதையை அதிலே பார்க்கிறான். கண்ணுக்குத் தெரிந்தது தெரியாதது எல்லாம், அவன் கற்பனைக்குப் பிடிபடுகிறது. காரணம், அவன் சிந்தனை முழுக்க அதில் ஆழ்ந்து விடுகிறது. வேறு உலகம் அவனுக்கு நினைவுக்கு வருவதில்லை. அவன் ஒன்றில் ஈடுபட்டு விட்டால், தீர்ந்தான்! அவ்வளவுதான்! குறைந்தபட்சம் ஞாபக மறதியாவது அவனை ஆட்கொள்ளும். சொந்த வாழ்க்கையை ஒழுங்காகத் திட்டமிட்டு நடத்த அவனால் முடியாது. அந்தத் திட்டத்தில் ஈடுபட்டால் காவியம் பாட இயலாது. அதனால் சராசரி வாழ்க்கைக்கு லாயக்கற்றவன் கவிஞன். அதிகாலையில் எழுந்து, ஆறு மணிக்குக் குளித்து, எட்டு மணிக்குக் காலை உணவு அருந்தி பள்ளிக்குச் செல்வதுபோல் அலுவலகத்திற்குச் செல்ல அவனால் முடிவதில்லை. இரவு பனிரெண்டு மணிக்குக் கடற்கரைக்குச் செல்கிறான். சில சமயங்களில் அங்கேயே தூங்கிவிடுகிறான். வீட்டில் வந்து படுத்தால் மத்தியானம் பனிரெண்டு மணிக்குத்தான் எழுந்திருக்கிறான் இப்படி இப்படிப் பணம் சம்பாதிக்கலாம் என்பது அவனுக்குப் புரிவதில்லை. சம்பாதித்தால் ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரிவதில்லை. அதனால் அவனுக்கு விதிவிலக்குத் தேவை. நிதி அளிப்பும தேவை. அவன் தவறுகளுக்கு மன்னிப்பு வேண்டும் எல்லாக் கவிகளுக்கு மல்ல; ஒவ்வொரு தலை சிறந்த கவிஞர்களுக்கு மட்டும். அப்படிப் பார்த்தால், நமது தலைமுறையில் மன்னிக்கப்பட வேண்டிய தலைசிறந்த கவிஞர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

(வரும்)

முல்லை

சித்திரை இதழ்
தமிழ்நாடெங்கும்
விற்பனையாகிறது!

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 || 20-4-57 || இதழ் 31

காவிரியின் கரைதனிலே !

கழகத்தின் புதிய பருவத்தில், அரசோச்சும் கட்சியினரும், ஆடி ஓடி ஓய்ந்து கிடக்கும் பிற இடதுசாரிக் கட்சிகளும் நம்முடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கும் நேரத்தில் தி. மு. கழகத்தின் பொதுக்குழு திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலையில் இத்திங்கள் பதினான்காம் நாள் நடைபெற்றது. கழகத்திற்கு வெற்றியைத் தேடித்தந்த குளித்தலைத் தொகுதி, பொதுத் தேர்தலுக்குப் பிறகு கூடிய முதற் பொதுக்குழுவை தன்னுடைய மடியிலே கூட்டிக் காட்டிய பெருமையைப் பூரிப்புடன் பெற்றுக்கொண்டிருக்கிறது. காவிரியின் ஓரத்தில் கழகத்தின் முன்னோடிகள் ஒன்றுகூடி உளம் விட்டுப் பேசி, வாதம் செய்து ஐம்பெரும் முடிவுகளைக் கண்டிருக்கிறார்கள். அவையாவன :

1. அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெருவாரியான வாக்குகளைத் தந்து ஆதரித்த வாக்காளர் பெருமக்களுக்கும், அத்தகைய ஆதரவைத் திரட்டுவதற்கு உறுதுணையாகவிருந்த கழகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் பொதுக்குழு தனது நன்றியறிதலான பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

—தலைவர்

2. அண்ணா அவர்களைத் தலைவராகவும், தோழர் க. அன்பழகன் அவர்களைத் துணைத்தலைவராகவும், தோழர் மு. கருணாநிதி அவர்களை 'கொறடா'வாகவும், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். பி. சுப்பிரமணியம் ஆகியோரைச் செயலாளர்களாகவும் கொண்டு, 31-3-57 அன்று சென்னையில் நடைபெற்ற தி. மு. கழக எம். எல். ஏ.-எம். பி.-க்கள் கொண்ட கூட்டத்தில் அமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகச் சட்டசபைக் கட்சியை இப்பொதுக்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்று ஏற்றுக்கொள்கிறது.

3. மாவட்ட ஆட்சிமன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம், ஆகியவற்றிற்கான தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடுவதற்கான வழிவகை குறித்து ஆவன செய்யுமாறு பொதுச்செயலாளரை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

4. ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து அரசியலாரால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நாணய மாற்று முறையானது புதிய அடிப்படையில் இருப்பது வரவேற்கத்தக்கதெனினும், அதை நடைமுறைக்குக் கொண்டுள்ள விதமானது பொதுமக்களிடை குழப்பத்தை உண்டாக்கியிருப்பதுடன், ஏழை எளியவர்களுக்கு பெரும் கஷ்ட நஷ்டங்களை விளைவித்திருக்கிறதென்பதை இப்பொதுக்குழு அரசியலாருக்கு எடுத்துக் காட்டுகிறது.

(அ) நாணய மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசியலார் முன்கூட்டியே முயற்சி செய்யாதது மட்டுமின்றி, அரசியலாரே அஞ்சல் போக்குவரத்து போன்ற கட்டணங்களை அநியாயமாக உயர்த்தியிருப்பதை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இம்முறையினால் ஏற்பட்டுள்ள குழப்பங்களைப் போக்குவதற்கும், விலைவாசி ஏற்றங்களைத் தடுக்கவும் அரசியலார் உடனடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டுமென இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

5. பல ஆண்டுகளாகவே சிக்கலாக இருந்துவரும் காஷ்மீர் விவகாரத்தில், பாகிஸ்தானை ஊக்குவித்து குழப்பம் விளைவிக்கும் போக்கில் அமெரிக்காவின் தலைமையில் ஐ. நா. சபையும், வல்லரசுகளும் நடந்துகொள்வது உலக சமாதானத்தைக் குலைக்கத்தக்க போக்காகுமோ என்று அஞ்சுவதுடன், வல்லரசுகளின் இப்போக்கை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது

முதல் இரண்டு தீர்மானங்களும் தலைவரால் கொண்டுவரப்பட்டவைகளாகும். கழக அபேட்சகர்களுக்கு வாக்களித்த பொது மக்களுக்கும் பணிபுரிந்த தோழர்களுக்கும் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் நன்றி செலுத்திய தீர்மானம் முதலாவது தீர்மானம். இரண்டாவது தீர்மானம், தி. மு. கழகத்தின் சட்டசபைக் கட்சியை வரவேற்பது. கழகத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு, அல்லும் பகலும் உழைத்த சுயமரியாதைச் செல்வங்கள் முதன் முறையாகப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று தனிக் கட்சியாக கலப்பில்லாத தூய்மை மிகு தூதுவர்களாக சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் அமர்வதற்கான கட்சியமைப்பை பொதுக்குழு பெருமகிழ்வுடன் வரவேற்றது. நமது குரல், தொனி குறையாது இனி சட்டசபையில் ஒலிக்கும் என்ற பூரிப்பில் தி. மு க. சட்டசபைக் கட்சிக்கு பொதுக்குழு மனப்பூர்வமாக வரவேற்பளித்தது.

மூன்றாவது தீர்மானம், மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சிமன்றம் ஆகியவற்றிற்கான தேர்தல்களில் தலையிடுவது பற்றிய தீர்மானம். இந்தத் தீர்மானம்தான் பிற கட்சிக்காரர்களைப் பீதி கொள்ள வைத்த தீர்மானம். இந்தத் தீர்மானத்தைத்தான் எல்லாத் தினசரிகளும் முன் பக்கத்தில் தடித்த எழுத்துக்களில் பிரசுரித்திருக்கின்றன.

மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றம் ஆகியவற்றின் தேர்தல்களில் கட்சி சார்பில் போட்டியிடுவது அவசியம் தானா? ஸ்தல ஸ்தாபனங்களில் கட்சிப் போராட்டம் தேவையில்லையென்று நாமே பல இடங்களில் பேசியிருக்கிறோமே? என்பன போன்ற பல எதிர்வாதங்களைக் கிளப்பி உறுப்பினர்கள் மனம்விட்டு வாதித்தார்கள். முடிவு, தீர்மானத்தில் கண்டுள்ளபடி நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை கலைஞர் மு. கருணாநிதி கொண்டுவர, மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து வழிமொழிந்தார்.

நான்காவது தீர்மானம் 'புதிய காசு' பற்றியது. கடைசித் தீர்மானம் காஷ்மீர் பற்றியது. நம்மைப்போல் ஒரு ஆட்சியின் பிடியின்கீழ் மிதிபட்டுக் கிடக்கும் மக்களைப் பற்றிய தீர்மானம், அது. தென்னாட்டில் மட்டும் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு கட்சி காஷ்மீர் பற்றித் தீர்மானம் போட்டு என்ன பயன் என்று கேட்கக் கூடும். கழகத்தின் பெருந்தலைவர்களில் ஒருவரும், நா நலம் கொண்டவர்களில் ஒருவருமான சொல்வலர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் டில்லி பாராளுமன்றம் புக இருக்கிறார் என்பதை மற்றவர்களுக்கு இங்கே நினைவுபடுத்துகிறோம். அங்கே நமது சம்பத் அவர்கள், குபேர நாட்டினர் நடந்துகொள்ளும் விதத்தை நமது தீர்மானத்தின்மீது நின்று பேசுகையில் கழகத்தின் கீர்த்தி டில்லி மன்றத்தில் ஒலிக்கும். காஷ்மீர் சிக்கல் தீரப் பயன்படும் அவரது சொற்பொழிவு.

எனவே, குளித்தலை முடிவுகள் கழகத்தின் எதிர்காலப் பணிக்கு பலம் தரும்வகையில் அமைந்திருக்கிறது. அந்த முடிவை தமிழகமெங்கணும் பரப்பி கழகத்தின் சக்தியினைப் பெருக்கிடப் பாடுபடுவோமாக !

புதிய பகுதி !

"சட்டம் ஓர் இருட்டறை"

தென்றலில் தொடங்க இருக்கும் புதிய பகுதி இது. தமிழகத்தின் புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் சொல்ல இருக்கிறார்கள்.

**மிக விரைவில் தொடங்க இருக்கிறது ;
படிக்கத் தவறாதீர்கள் !**

காமராசரே! 'களகர்' சபையைக் கவனியுங்கள்!

நேரு பண்டிதரின் புதிய அமைச்சரவையின் பட்டியல் வெளியாகியிருக்கிறது. தமிழ்நாட்டின் பெரும் காங்கிரஸ் தலைவர்களெல்லாம் சோகப் பெருமூச்சு விடும் வகையில், டில்லி அமைச்சரவையின் பட்டியல் வெளியாகி இருக்கிறது. '**உனக்கில்லை! எனக்குத்தான்!**'' என்று முட்டி மோதிக்கொண்டவர்களெல்லாம், மோகனப் புன்னகையை விட்டு, மோனநிலை எய்தி விட்டார்கள் தமிழகத்தில்! சென்னை மந்திரி சபையில் இடம் கேட்டவர்களுக்கெல்லாம் வடநாட்டை நோக்கிக் கண்ணை உ...டிக் காட்டிய காமராஜர்கூட பெருத்த விசனத்தில் மூழ்கியிருக்கிறாராம்!

ஆச்சாரியாரிலிருந்து அத்தனை பேரும், இனிமேல் டில்லியில் தமிழருக்கு அதிகச் செல்வாக்கு இருக்கும், சலுகைமிகக் காட்டப்படும் என எதிர்பார்த்தார்கள். தமிழ்நாட்டில் கிளம்பியிருக்கும் எதிர்ப்பைச் சரிக்கட்ட டில்லி மந்திரி சபையில் தமிழர்களுக்கு அதிக இடம் ஒதுக்கப்படும் என்று காங்கிரஸ்காரர்கள் அனைவருமே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்தபோது லால்பகதூரின் ராஜினமாவை ஏற்றுக்கொண்டுவிட்டு, அரியலூர் அழகேசனுக்குப் பரிந்து டில்லியிலிருந்தே காஞ்சிபுரம் தொகுதிக்கு தேர்தல் பிரச்சாரம் செய்தபோது இங்கிருந்த காங்கிரஸ் தலைவர்களுக்கெல்லாம் உச்சி குளிர்ந்துவிட்டது! நேரு தமிழகத்தைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார் என்று பெருமையடித்துக்கொண்டார்கள். ஆனால் காஞ்சிபுரம் தொகுதியில் நீதி வென்றுவிட்டது. நீதியின் வெற்றி காங்கிரசிற்குப் பலத்த அடியாக அமைந்துவிட்டது. நேருவின் பேச்சுக்கே காஞ்சிபுரம் தொகுதியில் மதிப்பில்லை என்று தெரிந்து கொண்ட காங்கிரஸ்காரர்கள், இனிமேல்தான் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது, ஆத்திரம்கொண்ட நேரு இனிமேல் தான் தமிழ்நாட்டை வசப்படுத்தப் புதுப்புது பதவிகளைத் தமிழருக்குத் தரப்போகிறார் என்று தத்தமது காதுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். என்ன நடந்தது இப்போது? தமிழருக்கு எவ்வளவு முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது அங்கே?

டில்லி அமைச்சரவையில் டி. டி. கே.யைத் தவிர அத்தனைபேரும் வடநாட்டுக்காரர்களே இடம்பெற்றிருக்கிறார்கள். பதிமூன்று மந்திரிகளில் தமிழர் ஒருவரே மந்திரி பதவி பெற்றிருக்கிறார். ராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் பதினன்கு பேர்களில் யாருமே தமிழ்நாட்டுக்காரர்கள் இல்லை. அதேபோல் துணை அமைச்சர்களாகப் பன்னிரெண்டு பேரும் வடதிசையைச் சேர்ந்தவர்களே தான் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

இந்தப் பட்டியல்களைப் பார்க்கும்போது டி. டி. கே. க்கு மட்டும் எப்படிச் சந்தர்ப்பம் கிடைத்தது என்பதைச் சந்தேகத்தோடு ஆராய வேண்டியிருக்கிறது. (காங்கிரஸ் சுதந்திரம் பெற்றதிலிருந்து இது வரை பலபேர் நிதி மந்திரிகளாகப் பதவியேற்றுவிட்டார்கள். அவர்களில் யாருமே காங்கிரசிலே பற்றுக்கொண்டவர்களல்ல. ஆர். கே. சண்முகம், ஜான் மத்தாய், சிந்தாமணி தேஷ்முக், டி. டி. கே. இவர்கள் நால்வருமே காங்கிரசின் வைரிகளாக நாட்டில் உலவியவர்கள். டி. டி. கே. அந்திய காலத்தில் காங்கிரசில் குடியேறியவர். அதுவும் உண்மையான பற்றின் காரணமாக அல்ல என்பதை அனைவரும் அறிவார்கள்.) ஏன் அந்தச் சந்தேகம்? வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இடையே வளர்ந்துவரும் பகைமையை அழித்துவிட முயன்ற நேருவின் முயற்சி படுதோல்வியடைந்துவிட்டது. இனி எந்த சக்தியாலும் அந்த வெறுப்பை நீக்கிவிட முடியாத அளவுக்கு திராவிடநாட்டுக்கும் வடநாட்டுக்குமிடையே அதிருப்தி வளர்ந்துவிட்டது. ஆகவே இனி தமிழ்நாட்டை நம்பிப் பயனில்லை என்பது நேருவுக்கே புரிந்துவிட்டது. தமிழகத்தின் எந்த உதவியுமில்லாமல் வடநாடு இயங்குவதற்கான வழிவகைகளை இப்போது முதற்கொண்டே நேருப் பண்டிதர் செய்துகொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கிறார். அதன் அறிகுறிதான் இன்றைய டில்லி அமைச்சரவையில் தமிழர்கள் இடம் பெறாது போனது. டி. டி. கே. க்கு மட்டும் இடம் கிடைத்த காரணம், புதியதோர் நிதிமந்திரியை உருவாக்கும் வரையில் தான் டி. டி. கே. டில்லியில் தங்கமுடியும் என்ற நிலையைப் பண்டிதர் திட்டமிட்டுக் காரிய மாற்றுகிறார் என்பதைச் சற்று கூர்ந்து கவனித்தால் புரிந்துகொள்ளமுடியும். பழைய மந்திரிசபையில் மூன்று பேருக்கு இடமளித்துவிட்டு இந்த மந்திரிசபையில் ஒருவருக்குக்கூட - துணை மந்திரிகளில் கூட் இடமளிக்கவில்லையென்றால் நேருவின் மனநிலைதான் என்ன என்பதை ஆராய எந்தக் காங்கிரஸ் தலைவரும் முனைந்ததாகத் தெரியவில்லை. பம்பாய்க்காரர்கள் நால்வரும், உ. பி. காரர்கள் நால்வரும் புதிய மந்திரி சபையில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுக் காங்கிரசிற்கு உயிர் கொடுத்து 19 காங்கிரஸ் அபேட்சகர்களை வெற்றிபெறச் செய்த சேலம் மாவட்டம், டில்லியில் எஸ். வி. ராமசாமியை அழகுக் கொலுவிருக்கக் காணத்துடித்து ஏமாந்தது வருந்தத் தக்கதாகும். 'காமராஜரே! இது தர்மமா?' என்று சேலம் கேட்டு நிற்கிறது. காமராஜர் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு பதில் சொல்ல அவருக்கு உரமிருந்தது. தன் சொந்தக் கட்சிக்காரர்களின் மனக் குழப்பத்தை எப்படி நீக்கப் போகிறார்? "காமராஜரே! உங்களுக்கும் நாமம் சாற்றிவிட்டாரே நேருப் பண்டிதர்'' என்று திக்கெட்டுமிருந்து குரல் கிளம்பிவிட்டது. அந்தக் குரலைத் தற்கால சாந்திக்குப் பயன்படுத்திக்கொள்பவர்கள் நிச்சயமாக ஏமாந்து போவார்கள். அந்தக் குரலை 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கத்திற்கு துணைக்குரலாகப் பயன்படுத்தினால்தான் இனிமேற்கொண்டு டில்லியை எதிர்ப்பதற்கு உண்மையான பொருளுண்டு என்பதைக் காங்கிரஸ் எதிர்ப்பார்கள் தெரிந்துகொள்ளவேண்டும். ★

★ ★ ★

ஆழி சூழ் தாயகம்!

திராவிடம் தனி நாடானல் அது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் அளவுக்கு வசதி படைத்ததாக இருக்குமா?-என்று இன்னும் பலர் கேட்ட வண்ண முள்ளனர். அவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தில் ஈடுபாடு கொள்ளாத மாற்றார் மட்டுமல்ல கட்சிப் பற்றற்றவர்களும் இருக்கிறார்கள். அத்தகையோருக் கெல்லாம் திராவிடத்தன் ஒரு குறிப்பிடத்தக்க வருமானம பற்றிய செய்தியைக் கடந்த 15-ம் நாள் நாகப்பட்டினத்தில் சென்னைமாநில கைதொழில் வர்த்தக அடிஷனல் டைரக்டர் திரு அருள்தாஸ் அவர்கள் அளித்துள்ளார்கள்.

15-ம் தேதி அங்கு துவக்கப்பட்ட மீனவர் பயிற்சிப் பள்ளி ஆரம்ப விழாவில் பேசிய அவர், **நிலத்தில் கிடைக்கும் வருமானத்தைவிட எளிதாகச் சமுத்திரத்திலிருந்து அதிகப்படி வருமானம் கிடைக்கிறது** என்றும், அதற்கு எடுத்துக் காட்டாக **தூத்துக்குடியில் இரண்டு இயந்திரப் படகுகள் மூலம் இரண்டு மாதங்களில் ரூபாய் ஐயாயிரம் லாபம் வந்துள்ளதையும்** சுட்டிக்காட்டியுள்ளார்.

திராவிடநாடு செந்நெலும் செங்கரும்பும், வாழையும் வளங்கள் பலவும் பெற்றதாக மட்டுமல்லாமல், முப்பறமும் சுமார் ஆயிரத்து ஐந்நூறு மைல் கடற்கரை கொண்டதுமான எழில்சேர் மண்டலம் என்பது எடுத்துக் காட்டப்பட்ட ஒன்றாகும். அத்தகைய நாட்டின் கடற்கரை ஓரங்களிலெல்லாம் மீனவர்கள் தினசரியும் கடல்மேற் சென்று மீன் பிடித்து வாழ்கின்றனர். அவர்கள் பெற்று வருகிற மீன்கள் மூலம், இன்று கிடைக்கப் பெறும் வருமானத்தை அதிகப்படுத்தும் அளவில், இயந்திரப் படகுகள் ஏற்பாடு செயயப்பட்டுள்ளன. அவை அதிக அளவில் பயன்படுத்தப் பட்டால், திராவிடத்தில் கிடைக்கும் மீன்களால் வரும் வருமானம் ஏராளமாகும். இயற்கை தந்துள்ள அந்தப் பெருஞ் செல்வத்தைக் கணக்கிட்டால், அது நிலப்பகுதியில் கிடைக்கும் வருமானத்தைவிட அதிகமாகும் என்று நாமல்ல, திரு அருள் தாஸ் அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள். உலகெங்குமுள்ள நாடுகளில் மீன் பிடிக்கும் வசதியை உடைய கடற்கரைப் பகுதிகளில் திராவிடத்திற்குத் தனி இடம் உண்டு. அந்த வளத்தை நாம் முறையாகப் பெற்றால், பெறுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபாடு கொண்டால் நாடு வளம் பெறுவதற்கான வகைகளில் ஒன்றில் கவனம் செலுத்துவதாகும்.

இத்தகைய பெருகலான வளங்கள் பெற்றிருக்கிற திராவிடத்தைத்தான் தனித்துவாழ முடியுமா? என்று எப்போதும் தன்னம்பிக்கை இழந்து தவிக்கும் 'ஏக இந்தியா'க்கள் கேட்கிறார்கள்.

ஆனால் நமக்குத் தெரியும், அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு பெசுகிறார்களே தவிர, உண்மை வழியில் நின்று அல்ல என்று.

உலக நாடுகளில் முக்கிய இடங்களை வகிக்கும் சில நாடுகள் கூடக் குறிப்பிட்ட சில தொழில்களை மட்டுமே நம்பி வாழ்கின்றன குறிப்பிட்ட சில வருமானங்களை மட்டுமே வைத்துக் கொண்டு தங்களின் தனித்தன்மையைக் காட்டிக் கொள்கின்றன. கடிகாரத்தை மட்டுமே நம்பி வாழும் நாடு, காகிதத்தை நம்பி வாழும் நாடு, விளையாட்டுச் சாமான்களை விற்று வாழும் நாடு, ரப்பரைக் காட்டி வளத்தைப் பெருக்கிக் கொண்ட நாடு உலகப் படத்தில் தெளிவாகத் தெரிகின்றன. அவை எல்லாம் தமக்கெனத் தனிக் கொடியும், தனி அரசு உரிமையும் பெற்றுத் திகழ்வதை எவரும் மறைத்திட முடியாது.

ஆனால் செல்வம் எத்தனை உண்டோ அத்தனையும் பெற்றிருக்கிற நமது அன்னை பூமி, இன்னும் அடிமை நாடாக ஆதிபத்திய வாதிகளின் பின்னே நிற்பது, நமது சுயமரியாதை உணர்வை சோதிப்பதாக உள்ளது.

அந்தச் சுயமரியாதையாளரின் பெரும் போருக்கு மேலும் ஆக்கமும், ஆதரவும் தருவதாக அருள்தாஸ் அவர்களின் எடுத்துக் காட்டு அமைந்துள்ளது.

★ ★ ★

பரிசுப் புடவை

(4)

என்றைக்கு இந்தக் கட்டிடத்தில் குடியேறினேனோ, அன்றே இந்த நாடகத்தின் முதற்கட்டம் ஆரம்பமாகிவிட்டது. அவர் குளிக்க இந்த மாடிக்குள்ள பொதுவான அறைக்குச் சென்றார். நான் பின்னல் சோப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு சென்றேன். அப்பொழுதுதான் அந்த மாபாவியை முதன் முறையாகப் பார்த்தேன். காணுததைக் கண்டதுபோல முறைத்துப் பார்த்தான் என்னை. ஒரு வினாடியில் என் உடல் பதறிவிட்டது. தலையைக் குனிந்து கொண்டேன். அதற்குப் பிறகு சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் என்மீது அவன் பார்வை செல்லாமலிருப்பதில்லை. அன்று மாலையே அவன் கடைக்குப் போனோம்,துணிமணிகள் வாங்க. ஐயோ! அப்பொழுது அவன் என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே, சொல்ல நாக் கூசுகிறது, சார்!

என் கணவர் ஒரு வெகுளி. உலகமே தெரியாதவர். அவரை எப்படியோ சரிசெய்து, நண்பராக்கிக்கொண்டான் அந்தக் கபடன். நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவனோடு பேசுவதற்கும் சீட்டாடுவதற்கும் போய்விடுவார் என் கணவர். சாப்பிடுவதற்குக்கூட நான் போய் ஞாபகப்படுத்த வேண்டும். சில நேரங்களில் இருவருக்கும் என்னையே சோறு போடச் சொல்வார். இப்படி என்னைச் சந்திப்பதற்கும், என்னோடு நெருங்கிப் பேசுவதற்கும் சந்தர்ப்பங்களை அதிகப்படுததிக்கொண்டான் இந்த ஆசாமி. அவனுடைய நோக்கம் என்னவென்பதை, அவன் கண்களிலிருந்து வீசிய காமக்கனல் நன்றாகக் காட்டிற்று. எந்த நேரத்தில் என்ன ஆபத்து விளையுமோ என்று சில நேரங்களில் பயம் தோன்றுவதுகூட உண்டு. இந்தச் சமயததில் 'தீபாவளி' வந்தது. புதுத்துணிகள் வாங்குவதற்கு என் கணவரிடம் பணவசதி கிடையாது. "தீபாவளி வந்தாலென்ன? நாமென்ன சொந்த ஊரிலா இருக்கிறோம? புதுத்துணியும் வேண்டாம்...அதனால் கடனும் வேண்டாம்!" என்று திரும்பத் திரும்பச் சொன்னேன். அவரா கேட்பார்! "பண்டிகைக்கு உனக்குத் துணி வாங்கிக் கொடுக்காமல் என் பணம் வேறு எதற்குப் பயன்படவேண்டும்?" என்று கேட்டுவிட்டு என்னையும் அழைத்துக்கொண்டு 'சங்கர் லால்' கடைக்குப் போனார். போகும் வழியில் "புடவை வாங்குவதற்குப் பணம்...?" என்றேன். "பணத்தைப் பற்றி என்ன கவலை சக்கு... நம்ம கோமதிநாயகம் கடையில் பத்து எழுதிக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன். ஆகவே மாதம் கொஞ்சமாகக் கொடுத்துத் தீர்த்துக் கொள்ளலாம்!" என்றார். முதலில் எனக்கு இந்த ஏற்பாடு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ஆனாலும் வேறுவழிதான் என்ன இருக்கிறது? எப்படியும் எனக்கும் ஓரிரு நல்ல புடவைகள் தேவை. ஆகவே நடந்தவரை சரிதான் என்று கடைக்குள் நுழைந்தேன். வாயிலிலேயே வரவேற்றான், இந்த சூதுக்காரன். குழைவாகப் பேசினான். சிரித்த முகத்தோடு எங்களுக்குப் பணிவிடை செய்தான். அவனுடைய சாகசத்தில் நான்கூடக் கொஞ்சம் மயங்கிவிட்டேன் என்று தான் கூற வேண்டும்.

"வாங்குவதுதான் கடன் என்றாகிவிட்டது: கொஞ்சம் விலை அதிகமானாலும் இந்த பெனாரிஸ் புடவையை எடுத்துவிடலாம்!" என்றேன். அதற்கு என் கணவர் இசையவில்லை. கடனை அதிகமாக்கிக்கொள்வது ஆபத்து என்று கூறிவிட்டார். இந்த சம்பாஷணையை சாதகமாக்கிக் கொண்டான்,சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த கோமதி நாயகம்!

நாங்கள் புடவை எடுத்துவந்த மறுநாளே, அந்த பெனாரஸ் புடவையுடன் எங்கள் அறைக்கதவைத் தட்டினான். அவர் அப்பொழுதுதான் ஆபீசுக்குப் போனார். நான குளிப்பதற்குத் தயாராகிக்கொண்டிருந்தேன். கதவிடிக்கும் சப்தம் கேட்டு, அவர்தான் திரும்ப வந்துவிட்டாரோ என்று அவசரமாகப் போய்க் கதவைத் திறந்தேன். இவன் நின்றுகொண்டிருந்தான். கையில் புடவைக்கட்டு இருந்தது. பழையபடி என்னை தலையிலிருந்து கால்வரை ஒருதடவை பார்த்தான். எனக்கு வெட்கமாக இருந்தது. புடவையை என்னிடம் கொடுத்தான். இதற்குள் எதிர்த்த அறையில் யாரோ வெளியே வரும் சபதம் கேட்டது. அந்தக் கோலத்தில் என்னைப் பார்த்தால், அவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்? ஆகவே நான் சட்டென்று உள்ளே போனேன். அவனும் என்னைப் பின் தொடர்ந்து உள்ளே வந்துவிட்டான்! அந்தப் புடவையை எடுத்துக்கொள்ளும்படி என்னைக் கெஞ்சினான். நான் அவ்வளவு சுலபத்தில் ஏமாந்துவிடுவேன் என்று எண்ணினான் போலும். கண்டிப்பாகக் கூறிவிட்டேன். "இந்தப் புடவைக்கு நான் பணம் கொடுத்துவிடுவேன்... ஆனால், மாதம் கொஞ்சமாக!" என்று கூறியதோடு இந்த வியாபாரத்தை அவரிடம் தெரிவிக்க வேண்டாமென்றும் சொல்லிவைத்தேன். அவருக்குத் தெரிந்தால் வீணாக வருத்தப்படுவார். கடனை அதிகப்படுத்துகிறேன் என்று கோபிப்பார். எனக்கு ஒரே தைரியம் என்னவென்றால், பொங்கலுக்கு என் தாயார் எப்படியும் ஐம்பது ரூபாயாவது அனுப்புவார்கள்; அதோடு கொஞ்சம் மிச்சப்படுத்தினால் இந்தப் புடவையை வாங்கிவிடலாம் என்பதுதான். ஆனால் நான் நினைத்ததற்கு நேர் எதிராக நிலைமைகளை உண்டாக்கிவிட்டது இந்தப் புடவை.

அன்று நான் சமையல் செய்துகொண்டிருந்தேன். எங்கேயோ வெளியே போய் வந்த என் கணவர், "சக்கு! உடனே இரண்டு ரூபாய் பணம் கொடேன்!" என்றார். "பெட்டியைத் திறந்து எடுத்துக் கொள்ளுங்களேன்!" என்று ஞாபக மறதியாகக் கூறிவிட்டேன். அவர் திறந்தார். 'புடவை' ஞாபகம் வந்து சட்டென்று நான் எழுந்து ஓடினேன். அதற்குள் அதை அவர் பார்த்துவிட்டார். "இது, ஏது?" என்றார். விஷயத்தை விளக்க எனக்கு பயமாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக உளறினேன். ஆனால் நான பூராவும் விளக்குவதற்குள் "நன்றி கெட்ட நாயே...... நம்பினவனை மோசஞ் செய்த துரோகி! நான் கேள்விப்பட்டது சரியாயிருக்கிறதே!!" என்று கூறிக்கொண்டே, அவன் அறைக்கு ஓடினார். பிறகு நடந்ததுதான் உங்களுக்குத் தெரியும். இரண்டு பேரும் வாய்க்கு வந்ததையெல்லாம் பேசிக்கொண்டார்கள். இடையிடையே என் பெயர் அடிபட்டது. வாய்ச்சண்டை கைச்சண்டையாகியது. அதற்கு மேலும் என்னால் பொறுக்கமுடியவில்லை. நான் அவன் அறைக்கு ஓடினேன். எல்லா அறையிலிருந்தும் மக்கள் வெளியே வந்தனர். ஆனால் அதற்குள் அந்தப் பாவி என் கணவரைக் கீழே விழும்படி செய்துவிட்டான்! என்னைப் பெண்டாள நினைத்தான்...அதற்கு என் மஞ்சள் கயிற்றையே அறுத்துவிட்டான். அவன் வாழ்க்கை மலருமா? இல்லை......உலகத்துப் பெண்கள் அனைவருமே அவனை வெறுப்பர். இவன் போன்றோர்களால் தினந்தோறும் ஆயிரக்கணக்கான குடும்பம் பாழாகிறது. என் கணவன் இறந்ததற்குக் காரணமான இவனைத் தூக்கிலிடவேண்டும். நான் "வேண்டாமென்றேன்." பரிதாபமாகக் கெஞ்சினான். அதற்கு இளகியதின் பலன் இவ்வளவு பெரிய ஆபத்தில் வந்துவிட்டது!

★

இந்த இரண்டு சுயசரிதைகளையும் வைத்துக்கொண்டு வழக்கின் விபரத்தை எப்படி எழுதுவது? ஒரே சம்பவத்தை கணவன், மனைவி, நண்பன் மூவரும் மூன்று கோணங்களிலிருந்து பார்த்ததன் பலன்தான் இந்தக் கொலை என்று எண்ணுவதா? அல்லது இதைவிட இன்னும் வெளிப்படாத உண்மைகள் இருக்குமா? கோமதிநாயகம் உண்மையில் தவறு செய்யவில்லையா? சக்கு தூய்மையானவளா? அவளுடைய அங்க அவயவங்கள், அவளுக்கு "அடக்கமான பெண்" என்ற பட்டத்தை நிச்சயமாகக் கொடுக்காது! அதற்காக அழகான பெண்கள் மோசமானவர்கள் என்று எண்ணுவது சரியல்லவே? அதே மாதிரி கொஞ்சம் சலனப்புத்தி படைத்த ஆண்கள் அத்தனை பேரும் தவறு செய்கிறார்கள் என்று எண்ணுவதும் சரியல்லவே! இப்படி ஆயிரக்கணக்கான எண்ணங்கள் என் மனதில் எழும்பி குழப்பத்தை உண்டாக்கிவிட்டன. இதற்குமேல் என்ன எழுதுவதென்று தெரியாமல் தூங்கிவிட்டேன்.

தூக்கத்தில்......!

"இரண்டு பேருமே உங்களை ஏமாற்றிவிட்டார்கள், சார்!" என்று யாரோ சிரித்த சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். தனபால் நின்றுகொண்டிருந்தார்.

"உங்கள் மனைவி கூட வர என்றால், அவள் என்ன, தெய்வீக பிறப்பா, என்ன? மனித ஜாதி தானே, சார்! மனித ஜாதியிலே பிறந்தவர்கள் எவருமே நன்றி கெட்ட ஜென்மங்கள்! அண்டராகிளிஸ் கதையிலே சிங்கம், நன்றி மறக்காமலிருந்தது! ஆம், காட்டில் கண்ட மிருகங்களை அடித்துத் தின்னும் சிங்கம் நன்றியோடிருந்தது. குதிரை நன்றி மறக்காமல் எஜமானனைத் தூக்கியோடிய கதையை நீங்கள் படித்திருப்பீர்கள்.

பவாணன்

தனக்குப் பாலூற்றியவன் இறந்தானே என்று, தன் கடைசி மூச்சுவரை பிணததிற்குப் பக்கத்திலே நின்று ஓலமிட்டு இறந்த நாயின் கதையைக்கூட நீங்கள் படித்திருப்பீர்கள்! ஆனால் மனிதன் நாயையும், குதிரையையும்விட நன்றி கெட்ட ஜென்மம், சார்!" என்று கூறிவிட்டு மறுபடியும் சிரித்தார். அவர் சிரிப்பு, மலைகளில் மோதி எதிரொலித்தது!

"ஏன், அவ்வளவு வெறுப்பாகக் கூறுகிறீர்கள்? உண்மையில் நடந்தது என்ன?" எனறேன்.

"உண்மையில் நடந்ததா...? கூறுகிறேன். கேளுங்கள்..." என்று அவர் கூற ஆரம்பித்தார்.

"எனக்குத் திருமணமாவதற்கு முன்பே சக்குவைப் பற்றி பலவிதமான கடிதங்கள் வந்தன. ஆனால்

வனைப் பார்த்து நீங்கள் ஏமாந் த மாதிரிதான், நானும் ஏமாந்து பானேன். பெல்லாரியிலேயே அவள் நடத்தையில் கொஞ்சம் சந்தேகம் வந்தது. ஆனால் அதை நான் கண்டுபிடிப்பதற்குள் சென்னை யில் வேலை கிடைத்து வந்துவிட் டேன். சரி, இனிமேலாவது ஒழுங் காகக் குடித்தனம் செய்துவரு வோம் என்றுதான் சென்னையில் குடியேறினேன். ஆனால் அந்த பாவிப்பயல்......ஏன் அவனை பாவி என்று கூறவேண்டும்?...கோமதி நாயகம், குடியேறிய அன்றே என் வாழ்க்கையில் குறுக்கிட்டான். நான் குளிக்குமறைக்குப் போனபிறகு தான் சோப்புக் கொண்டுவர மறந்துவிட்டதை உணர்ந்தேன். உடனே கதவைத் திறந்து பார்த் தேன். அவளும் அவனும் ஒருவரை ஒருவர் பார்த்து ரசித்துக்கொண் டிருந்தனர். என்னைக் கண்டவுடன் உத்தம பத்தினிபோலத் தலையைக் குனிந்து கொண்டாள் அவள். நானும் அவளுடைய அடக்கத்தில் ஏமாந்துபோனேன். பிறகு அவன் அறையிலும், அவன் அறையிலும் பலதடவைகள் நானிருக்கும்போதே அவளும் அவனும் சந்திக்க சந்தர்ப் பங்கள் நேர்ந்தன. அப்பொழுதெல் லாம் எனக்கு லேசாக சந்தேகங் கள் தோன்றும். ஆனால் அவ ளுடைய நடிப்பும், அவனுடைய வேடிக்கைப் பேச்சுக்களும் என் மனதிலிருந்த சந்தேகங்களை ஓட்டி விடும்.

தீபாவளிப் பண்டிகை வந்தது. என்னைப்போல குமாஸ்தாக்கள் இருக்கும் இந்த உலகத்தில் பண்டிகைகள் வருவது மகா அக் கிரமம். கையிலோ காசு இல்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை என்ற நிலை. சக்கு முதலில் "எனக்கு ஒன்றும் புதுத் துணி வேண்டியதில்லை என்று முதல் சாமத்திலே கூறி, ஏதாவது ஒரு புதுத் துணி வேண்டுமென்று மூன் றும் சாமத்திலே கூறினாள், எப்படி பணம் சம்பாதிப்பது என்று யோசித் துக்கொண்டிருந்த என்னிடம் வலு விலே வந்து வார்த்தை கொடுத்து கடன் பத்து எழுதிக்கொள்வதாகக் கூறினான் கோமதி நாயகம். இது 'நட்பின் அறிகுறி' என்று நான் எண்ணிக் கொண்டேன். ஆனால் அது சக்குவின் சாகசம் என்று எனக்கு தீபாவளி அன்று இரவு தான் தெரிந்தது.

இரவு 11 மணியிருக்கும். அமா வாசை இருட்டு. சரியாகத் தூக்கம் வரவில்லை. மெதுவாக எழுந்து ஏழாவது மாடிக்குப் போனேன். ஜில்லென்று காற்று வீசிக்கொண் டிருந்தது. ஏழாவது மாடியில் அறை கள் கிடையாது. குளிர்காற்றுத் தேவைப்படுவோர் அங்கே வந்து படுத்திருந்தனர். அதில் யாரோ இரண்டு பேர் பேசிக்கொள்வது என் காதில் விழுந்தது.

"10-ம் நம்பர் அறை......"

"ஆமாம்...17-வது அறையோட சம்பந்தம் போலிருக்கு......அவ னுக்கென்ன...'சங்கர்லால்' காஷி யர்...!" இந்த வார்த்தைகளைக் கேட் டதும் எனக்குத் தலை சுற்றியது. நான் சந்தேகப்பட்டது சரிதான். என் அறை பத்தாம் நம்பர் அறை...? என்னைச் சுற்றி இருப்ப வர்கள் அறிந்திருக்கும் உண்மை யைக் கூட நான் அறிந்திருக்க வில்லை. எனக்கு வெட்கம், ஆத் திரம், கோபம், வெறுப்பு எல்லாம் வந்தது. கீழே ஓடிப் போய் அவ ளிடமிருந்து ஒரு அடி விலகியே படுத்துக் கொண்டேன். மறு நாள் முதல், நான் ஆபீஸுக்குப் போன பிறகு அவள் நடத்தைகளைக் கண்கா ணிக்க ஆரம்பித்தேன். கீழே கூட் டுக்காரனை விசாரித்ததில் சென்ற வாரம் ஒருநாள் அவன் என் அறைக்கு வந்து போனதாகக் கூறி னான். பிறகு சிறிது நாட்களில் என் கண்ணாலேயே அவள் அவன் அறைக்குள் செல்வதைப் பார்த் தேன். கிட்டத்தட்ட அரை மணி நேரத்திற்கு மேலாகவே அவள் அவனோடு இருந்துவிட்டு வந் தாள். அவனுடைய முகமெல்லாம் சிவந்து உடலெல்லாம் வியர்த்த நிலையில் எங்கள் அறைக்குத் திரும் பிப் போனாள். அவள் அறைக்குள் நுழைந்த மறுகணமே நான் ஏதோ தற்செயலாக வருவதுபோல் அறைக்குள் நுழைந்தேன். அவள் திடுக்கிட்டுப் போனாள். அவ ளுடைய திருட்டுத்தனத்தை அவள் விழிகள் நன்கு காட்டின. "சக்கு......!" என்றேன், வழக்கம் போல. என்னைத் தாண்டிக் கொண்டு "குளித்துவிட்டு வரு கிறேன்!" என்று கூறிக்கொண்டே போய் விட்டாள். எனக்குக் கோபம் வந்தது. ஆனால் யாரிடம் காண்பிப் பது என்று தெரியவில்லை.

அன்றிரவு பூராவும் ஆத்திரமும், வெறுப்பும் என் மனதில் வளர்ந்து கொண்டே இருந்தது. மறுநாள் ஆபீசுக்குப் புறப்படும் போதுதான் அந்தப் புடவையைப் பார்த்தேன். கள்ளி...! மகா சாமர்த்தியமாகப் பொய் கூறுகிறாள். அந்தப் புடவை அதற்கு முதல்நாள் அவள் கள்ளக் காதலன் அளித்த பரிசு. இல்லை, இவள் உடலைவிற்றதற்குக்கிடைத்த கூலி. அந்தக் கபடனும் அவள் கதைக்கு ஒத்து ஊதுகிறான்! இரண்டுபேரும் பேசி வைத்துக் கொண்டு வாக்குமூலங்கள் கொடுக் கிறார்கள். உண்மையில் என்னை வஞ்சித்த அவளுக்குக் கொடுக்கப் பட்ட கூலிதான் அது! அன்றைக் குத்தான் நானே கண்ணால் கண்டு விட்டேனே! இனி என்ன ருஜு தேவை உங்களுக்கு? ஒரு பெண், வேறொரு ஆணின் அறைக்குள் நுழைய வேறு காரணம் என்ன சார் இருக்கமுடியும்? அதுவும், நான் ஆபீசுக்குப் போனபின், சமயம் பார்த்து திருட்டுப் பூனைபோல... இனி பேசி என்ன பயன், நான் உயிரோடிருந்திருந்தால் இருவரை யும் கொலை செய்திருப்பேன். அதிலும், அவள் நிச்சயமாகக் கண்டதுண்டமாக்கப்பட்டிருப்பாள். அவைகளை கழுகுகள் தின்பதை நான் வேடிக்கை பார்த்துக்கொண் டிருப்பேன்!

இந்தப் பெண்களை நம்பவே கூடாது, சார்! எந்த நேரத்திலே கணவன் ஏமாறுவான் என்று தான் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கண் ஒரு இடத்தைப் பார்க்கும்; கருத்து ஒரு இடத்திலே இருக்கும்! இளிப்பார்கள்; இனிய மொழி பேசுவார்கள். அதிலே ஏமாந்து கிடக்கும்போது கள்ளக் காதல் நடத்தப் போய்விடுவர். உல கத்து இலக்கியங்களில் பெரும் பகுதி கட்டிய கணவனுக்கு துரோ கம் செய்த பெண்கள் உருவகம் தானே அதிகம்! ஆனால் எவ்வளவு படித்தாலும் இந்த ஆண்களுக்குப் புத்தி வருவதில்லை. தேனில் விழும் ஈக்கள்போல, வஞ்சகக் கும்பலில் அவர்களே போய் விழுந்து துன் பத்தை அவர்களே தேடிக்கொள் கின்றனர்!"

"ஹும்...உம்...உஹூம்...!

"என்ன சார் இப்படி உறுமு கிறீர்கள். கெட்ட கனவா...?" என்று கேட்டுக்கொண்டே ஆபீஸ் பையன் என்னை எழுப்பினான். துள்ளிக்குதித்து எழுந்தேன்.

"ஏன் சார், இப்படி முறைக்கிறீர் கள்? எடிட்டர் மேட்டர் வாங்கிக் கொண்டு வரச்சொன்னார் சார்...!" என்றான் பையன்.

கனவில் தோன்றிய கணவன் தனபால் கூறிய வார்த்தைகள் என் காதில் ஒலித்துக்கொண்டே இருந் தன.

பேப்பரை எடுத்து, இந்த மூவர் கூறியதையும் எழுதி பையனிடம் கொடுத்தனுப்பி விட்டேன்.

அரைமணி நேரம் கழித்து பையன் மறுபடியும் வந்தான். அவன் கையில் ஆசிரியர் கொடுத் தனுப்பிய குறிப்பு இருந்தது.

"உண்மையில் நடந்தது தான் என்ன? இதில் யார் கூறியது உண்மை?" என்று கேட்டிருந்தார் ஆசிரியர்.

இதுவரையில் உலகம் தோன் றியது முதல் கேட்கப்படும் இந்தக் கேள்விக்கு நான் மாத்திரம் எப்படிப் பதில் கூறமுடியும்? ★

ஆசிரியத் தோழருக்கு

-இராசன்-

அவர்களும், நாமும்

அன்புள்ள ஆசிரியருக்கு

நமது நாடக மேடைகளில் அரசவேடம் புனைபவனுக்கு இடை ஆடை உடுத்துவதுபோல் வங்காளிகள் சாதாரணமாக உடுத்தியிருக்கின்றனர். நாடக அரசன் உடுத்தும் உடையின் வெளித் தோற்றத்தைவிட, தென்னாட்டுப் பார்ப்பனர் அணி யும் பஞ்சகச்சத்தைவிட சிறு மாறுதல் உடையது இவர்களின் இடை ஆடை. நமது பக்கத்தில் சர்வ சாதாரணமாக நிலவிவரும் ஜிப்பாவை மேலணிந்திருக்கின் றனர். அதுவும் முக்கியமாக வாயிற் துணியால்! இரு பக்கங் களிலும் பைகள் இருக்கின்றன. இடை ஆடையின் முன்புறத் தோற்றம், நமது பெண்கள் (மணமாகாதவர்கள்) 'கொசுவம்' என்ற பெயரில் பாதி புடவையை அடுக்கடுக்காக மடக்கி தொங்க விடுவார்களே அதுபோல் இருக் கும்! பிறகு அதை சட்டைப் பையில் செருகி நுனி நீட்டி யிருக்கும்படி வைத்திருப்பார் கள்.

சாதாரணமாக கல்லூரி மாண வர்கள் கைக்குட்டைகளின் நுனி தெரியும்படி பாண்டின் பைக் குள் சொருகுவதுபோல் நினைப்பு! இந்த நினைப்பும் அதன்படி நடப்பும், ஒருவிதத் தில் வேட்டி மண்ணைக் கூட்டு வதிலிருந்து தப்பவைக்கிறது. நிற்க!

வங்காளிகள் தங்களின் தாய் மொழியின் மேல் எத்துணை அன்பும் பாசமும் வைத்திருக் கின்றார்கள் என்பது அவர்களின் அலுவல்களிலிருந்து தெரிய வரும். நமது நாட்டில் இரண்டு கல்லூரி மாணவர்களோ அன்றி அரசாங்க அலுவலர்களோ சந்திக் கும் இடத்து தமிழ்மொழியில் பேசார்! திக்கித்திணறியேனும் ஆங்கிலத்திலேயே பேசுவார்கள். (இப்போது மணி வருகிறது. புது விழிப்புப் பெற்றுவிட்டது) ஆனால் இங்கு அப்படியல்ல. மிக மிக அத்யாசவசியத் தேவை ஏற் பட்டால் ஒழிய ஆங்கிலத்திலோ, அன்றி தானறிந்த மொழியிலோ பேசான்.

தான் பேசப்போகும் நபர் வங்காளி தெரியாத நபர் என்று அறிந்திருப்பினும் முதலில் வங் காளத்தில் அறைவர். அவன் திக்கித்திணறி முக்கி முணகி அம்கோ! பாஷா! மாலும்! நை (இதுவே சரியோ தவறோ இந்த நான்கு வார்த்தை தான் எனக் குத் தெரியும்.) என்ற பிறகு "ஓ! உங்களுக்கு வங்காளம் தெரியாதோ!" என்று சொல்லி விட்டு ஆங்கிலத்தில் பேசுவர்.

அது மட்டுமல்ல!

மேலதிகாரிகளின் நிலை நமது நாட்டில் சொல்லத்தரமன்று. பச்சைத் தமிழனாக இருப்பான்; தனது சிறுபிள்ளைக்கும் ஆங் கிலத்திலேயே பாடம் போதிக் கும் போதனா ஆசிரியரை நிய மிப்பான்! மனைவியும் ஆங்கிலம் படித்தவளாக இருந்துவிட்டா லோ, வீட்டில் தமிழே வாழாது! இப்படி இருக்கும் அதிகாரி தன் கீழ் பணியாற்றும் ஊழியர் களிடம் எங்ஙனம் தமிழில் பேசு வதை எதிர்பார்க்கமுடியும்?

ஆனால் இங்கு அவ்வாறு அல்ல! அவ்வாறு இல்லை என் பதைப் பெருமையுடனும் அதே சமயத்தில் நெஞ்சில் பொறுமிக் கொண்டும் கூறுகிறேன். மேலதிகாரிகள் தங்களுக்குக் கீழ்வேலை பார்க்கும் பணியாளர் களுடன் வங்காளத்தில்தான் பேசுகின்றனர். இங்கே மொழி வாழுமா அல்லது நம் நாட்டில் வாழுமா?

நான் அலுவலகத்தில் வேலை பார்க்க ஆரம்பித்த காலமுதல் "ஸ்ரீராம நவமி" "ராமகிருஷ்ண ஜெயந்தி" போன்றவைகட்கு நிதி வசூல் செய்ய ஆரம்பித்து விட்டனர். ராமனிடமோ அன்றிக் கிருஷ்ணனிடமோ அல்லது ராம கிருஷ்ணனிடமோ துளியும் நம்பு தலையும் பற்றுதலையும் இல்லை யென்றால் பிடிவாதம் பிடிக் கின்றனர்.

பொதுவாக இந்தியின் ஆதிக்கத் தைப் பற்றித் துளியும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. அதன் வேகமும் இங்கில்லை யென்று நினைக்கிறேன். ராவ ணன் ஆண்டால் என்ன ராமன் ஆண்டால் என்ன என்றிருப் பவர்கள். இன்னொரு எண்ண மும் வளர்ந்திருக்கின்றது. பதவி உயர்வு தருகிறேன் பீகாருக்கோ அல்லது மத்திய பிரதேசத் திற்கோ ஆந்திராவிற்கோ போ என்றால் போகான். சொந்த நாட்டை விட்டுவிட்டு அன்னிய நாடு சென்று அதிகப் பொருள் ஈட்ட ஒருக்காலும் சம்மதியான் சாதாரண வங்காளக் குடிமகன்.

அன்புள்ள
மணியம்,
வங்கம் வாழ் தமிழன்

தமிழ்நாட்டுக் 'கம்யூனிஸ்ட் கன்னி' தலைதெறிக்க ஓடிவந்தாள். ஓங்கிச் சிரித்தாள். உரத்த குரலில் முழங்கினாள்!

"வெற்றி! வெற்றி!" என்றாள்.

"என்னம்மா..எங்கே வெற்றி? நாகபட்டினத்திலா இராமநாதபுரத்திலா?" என்று கேட்டேன்.

"இல்லை! இல்லை! கேரளத்தில்! கேரளத்தில்!" என்றாள்.

"என் அக்காளுக்கு வெற்றி! மந்திரிசபைத் திருமணம்! என் அக்காள் வாழ்க"! என்று மேலும் மூச்சுவிடாமல் கதறினாள்.

அவள் கழுத்தைக் காட்டி, "எங்கேம்மா உன் தாலி?" என்று கேட்டேன்!

'ஓ'வென்று அழுதாள்.

"ஐயோ! தமிழர்கள் அறுத்து விட்டார்கள்!" என்று விம்மினாள்.

"கருமாதி இன்னும் நடக்கவில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை! கேரளத்தில் கல்யாணம் முடிந்து ஓய்ந்ததும்தான் இங்கே கருமாதியை கவனிப்பதாக இருக்கிறேன்" என்றாள்.

ஒரு நிமிட அனுதாபம்.

நிமிர்ந்து பார்த்தேன்.

அவள் சமாதி நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்!

★

கேரளத்தில் கம்யூனிஸ்ட்டு மந்திரிசபை அமைந்ததும், முதன் மந்திரி நம்பூத்ரிபாட்டை போலீசார் வந்து அழைத்துச் சென்றார்களாம். அதாவது போலீஸ் இலாகாவை அறிமுகப்படுத்துவதற்கு. அப்போது ரிசர்வ் லைனுக்கும் அழைத்துச் சென்றார்களாம். அங்கே, வரிசையாகத் துப்பாக்கிகளையும் ரிவால்வரையும் அடுக்கி வைத்திருப்பதைப் பார்த்ததும், அவர், பிறருக்குத் தெரியாமல் மெதுவாக ஒரு ரிவால்வரை மடியில் அழுத்திக் கொண்டாராம்.

இதைக் கவனித்த ஒரு போலீஸ் அதிகாரி, மெதுவாக அவர் அருகில்வந்து பணிவோடு இப்படிச் சொன்னாராம்:

"ஐயா, தங்கள் பெயர் சங்கரன் நம்பூதிரிபாட். தாங்கள் இப்போது அண்டர் கிரவுண்டில் இல்லை. அப்பர் கிரவுண்டில் தான் இருக்கிறீர்கள். தாங்கள் தான் முதன் மந்திரி. தயை செய்து, அந்த ரிவால்வரை இப்படிக் கொடுங்கள்."

★

"கேரளத்தில் மதுவிலக்கு ரத்து செய்யப்படவேண்டும்" என்று ஏ. கே. கோபாலன் சொன்னதைத் தொடர்ந்து, கேரள சிறை மந்திரி வி. ஆர். கிருஷ்ணய்யர், "இது மந்திரி சபையைக் கட்டுப்படுத்தாது" என்றாரல்லவா? இந்தப் பதில் ஏ. கே. கோபாலனின் மதிப்பை வெகுவாகக் குறைத்துவிட்டதாகவும், அதற்கு ஈடாக, குறைந்த பட்சம், ஏ. கே. கோபாலன் வரும் தேதிகளில் மட்டுமாவது கேரளத்தில் மதுவிலக்குத் தளர்த்தப்பட வேண்டுமென்று, 'வாழ் விழந்த' தமிழ்நாடு கம்யூனிஸ்டுகள் சொன்னதாகவும், கேரள மந்திரிசபை அதை மறுத்து, "வேண்டுமானால் கள்ளச்சாராயத்தை அனுமதிப்போம்" என்று கூறிவிட்டதாகவும் தெரியவருகிறது.

"அப்படிக் கள்ளச்சாரயத்தை அனுமதிப்பதானால், அதை கோலார் தங்கவயல் காம்ரேடுகளிடமிருந்தே பெறவேண்டும்" என்று சமீபத்தில் தங்கவயல் சென்றுவந்த தோழர் கே. டி. ராஜு ஒரு தீர்மானத்தை 'பொலிட் பீரோ'வுக்கு அனுப்பியுள்ளதாகச் சில செய்திகள் கூறுகின்றன.

★

'திருநெல்வேலிப் படுகொலை'யின் தலைவராகி, ஆயுள் தண்டனை அடைந்த பாலதண்டாயுதத்தை சிறையில் சில காம்ரேடுகள் சந்தித்து, கேரளத்தில் கம்யூனிஸ்ட் மந்திரிசபை அமைந்ததைச் சொன்னபோது, அவர் மிகவும் வருந்தினாராம். அவர் வாயிலிருந்து முத்துப்போல் கீழ்க்கண்ட வார்த்தைகள் உதிர்ந்தனவாம்.

"ஐயோ! இந்தக் கொலையை கேரளத்தில் செய்யாமல் போனேனே!"

★

தோழர் ஈ. வே. ரா. மீதும் மணியம்மைமீதும் கோர்ட் அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டுள்ளது குறித்து, கீழ்க்கண்ட அபிப்பிராயத்தைக் காமராசர் வெளியிட்டதாகத் தெரியவருகிறது.

"ஐயோ! நான் இவருக்குக் கொடுத்த பணமெல்லாம் தி. மு. கழகத்தை அவமதிக்கத்தானே! இவர் ஏன் போய் கோர்ட்டை அவமதிக்கிறார்!"

★

மத்திய அரசாங்க அமைச்சரவையில், தமிழ்நாட்டிலிருந்து டி.டி.கிருஷ்ணமாச்சாரி மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். "ஒருவர்தானே சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்!" என்று தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரம் கவலை தெரிவித்து பண்டித நேருவுக்குக் கடிதம் எழுதியதாகவும், அதற்குப் பண்டிதநேரு அவர்கள் கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

"அன்புடையீர்!

கடிதம் கிடைத்தது. வருந்துவதில் பயனில்லை. தமிழ்நாட்டு ஆட்களை மத்திய அரசாங்கத்தில் சேர்ப்பதற்கு நாங்கள் ஒரு விதியைக் கடைப்பிடிக்கிறோம். அதன்படி திரு. டி. டி. கே. யை மட்டும் சேர்த்திருக்கிறோம்.

N. B.-அந்த விதி: "கள்ளும் காசும் கொடுத்து ஓட்டு வாங்கியவர்கள் மட்டுமே மத்திய அமைச்சரவையில் இடம்பெறத் தகுதியுள்ளவர்கள்."

இங்ஙனம்

ஜவகர்லால் நேரு."

நடந்தது: தமிழ்நாட்டு அமை[ச்]சரவையில், பக்தவத்சல[ம்] போலீஸ் இலாகாவுக்கு நியமி[க்]கப்பட்டார்!

இலக்கியச்சான்று: இராம[ா]யணத்தில், 'ஸ்ரீமத்' அனுமா[ன்]தான் போலீஸ் இலாகாவை[க்] கவனித்தார்.

★

"மற்றைய மாநில மந்திரிகளெல்லாம், 1500 ரூபாய் சம்பளம் பெறும்போது, எங்கள் மந்திரிகள் கேரளத்தில் 350 ரூபாய்கள்தான் பெறுகிறார்கள் பார்த்தீர்களா?" என்று ஒரு கம்யூனிஸ்ட், உருக்கமாக உணர்ச்சியோடு கூறினார்.

"பாக்கி?"-மற்றொருவர் கேட்டார்.

"பாக்கி, தலைக்கு 1150 வீதம் மாதா மாதம் தாங்கள் செலுத்தி விடுவதாக, மாவூரும் குன்னியூரும் வாக்களித்திருக்கிறார்கள்"

"யாரிடம்?"

"ராமமூர்த்தியிடம்"

"அவர்கள் ஏமாற்றிவிட்டால்?"

"பயப்படாதே சிஷ்யா! இருக்கிறது ரஷ்யா!'

மூலம்: கற்பனை

தழுவல்: 'ஐமாபா' (அதாவது "ஐயோ! அம்மா! அப்பா!")

-வணங்காமுடி

பன்மொழிப் புலவர்

மணிவிழா

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்கட்கு வரும் ஜூன் 21ந் தேதியன்று 50 ஆண்டு நிறைகிறது.

வாழ்க்கையின் பெரும்பகுதியை அரசியலில் செலவிட்டு, அவதிகள் பல அடைந்த அந்தப் பெரும் புலவரின் மணிவிழாவை சென்னையில் கொண்டாடவும், அவருக்கு நிதியளிக்கவும் அவரது பழைய மாணவர்கள் முயன்று வருகின்றனர்.

பழைய மாணவன் என்ற முறையில் நான் இதில் பெரும் பங்கு கொள்கிறேன். 'தென்றல்' மணிவிழா மலரும் வெளியிடுகிறேன்,

மகிழ்ச்சிக்குரிய இந்த விழாபற்றிய முழு விபரமும் அடுத்த 'தென்றல்' இதழில் வெளிவரும்.

அன்பன்

கண்ணதாசன்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.